f

## தேசிய திருவிவிலிய வினாடி வினா – 2026 (முதல்)

# கிறிஸ்துவே உடன்படிக்கையின்



# நிறைவ

## பிரவு : தரம் 10 & 11

தேசிய மறைக்கல்வி நடுநிலையம்


## திருவிவிலிய வினாடி வினா - அட்டவணை (தரம் 10)

# கிறிஸ்துவே உடன்படிக்கையின் நிறைவு

| தலைப்பு | பிரதான இறைவார்த்தை பகுதி | கற்றல் பெறுபேறு | மேலதிக வசனங்கள் | காரணம் |
|---|---|---|---|---|
| பழைய ஏற்பாட்டு வாசகம் - உயிர்ப்பு திருநாள் திருவிழிப்பு | தொ. நூ.1:1 - 2:2 | கடவுளின் முதல் உடன்படிக்கைச் செயலானது படைத்தல் என்பதை விளங்கிக் கொள்வர் | "தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த பொழுது" - தொ.நூ. 1:1 | கடவுளின் வல்லமையை அதிகாரத்தை மற்றும் அவரது உடன்படிக்கைத் திட்டத்தையும் ஆரம்பத்திலிருந்து காட்டுகிறது. |
| | தொ.நூ. 22:1-18 | ஆபிரகாமின் கீழ்ப்படிதலானது நம்பிக்கையின் உடன்படிக்கை எனக் காண்பர்.. | "எரிபலிக்கான ஆட்டுக்குட்டியை பொறுத்த மட்டில், கடவுளே பார்த்துக்கொள்வார்" - தொ.நூ. 22:8 | கடவுளின் வாக்குறுதியில் நம்பிக்கையும் பிரமாணிக்கமும். |
| | வி.ப. 14: 15-15:1 | விடுதலைப் பயணத்தில் கடவுளின் பாதுகாத்தலை புரிந்துகொள்வர். | "ஆண்டவரே உங்களுக்காக போரிடுவார்: நீங்கள் அமைதியாய் இருங்கள்" - வி.ப. 14:14 | கடவுளின் பிரமாணிக்கத்தையும் உடன்படிக்கையின் பாதுகாப்பையும் காட்டுகிறது. |
| | எசாயா 54:5-14 | கடவுள் இஸ்ராயேல் மக்களின் மணமகன் போல உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக வாழ அழைக்கிறார் என்பதை தெரிந்துகொள்வர். | "ஏனெனில், உன்னை உருவாக்கியவரே உன் கணவர், படைகளின் ஆண்டவர் என்பது அவர்தம் பெயராம். இஸ்ரயேலின் தூயவரே உன் மீட்பர், - எசாயா 54:5 | கடவுள் தம் மக்களுடன் கொண்ட அன்பான மற்றும் நீடித்த உறவு. |
| | எசாயா 55:1-11 | உடன்படிக்கை என்பது வாழ்வுக்கும் மீட்புக்குமான அழைப்பு என்பதை உணர்வர். | "ஆண்டவரை காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள். அவர் அண்மையில் இருக்கும் போதே அவரை மன்றாடுங்கள்" - எசாயா 55:6 | கடவுள் தம்முடைய உடன்படிக்கையின் ஆசீரில் வாழ அனைவரையும் அழைக்கிறார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாரூக் 3:9 - 15, 32 - 4:4 | கடவுளின் உடன்படிக்கையில் இருந்து ஞானத்திற்கும் வழிநடத்தலுக்குமான அழைப்பை உணர்ந்துகொள்வர். | “இஸ்ரயேலே, நாம் வேறுபெற்றோர், ஏனெனில் கடவுளுக்கு உகந்தது எது என்பதை நாம் அறிவோம்” - பாரூக் 4:4 | ஞானத்தின் மூலம் கடவுளின் உடன்படிக்கைக்கு வழிகாட்டுதலை காட்டுகிறது. |
| | எசே. 36: 16 - 17, 18-28 | புதிய வாழ்விற்கான வாக்குறுதியும் உடன்படிக்கையின் புதுப்பித்தலும் என்பதை அறிவர். | “நான் தூய நீரை உங்கள்மேல் தெளிப்பேன். நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள்” - எசே. 36:25 | ஆன்மீக/உள்ளார்ந்த மாற்றத்திற்கு உறுதியளித்து கடவுள் தனது உடன்படிக்கையை புதுப்பிக்கின்றார். |
| புதிய ஏற்பாட்டு வாசகங்கள் - உயிர்ப்பு திருவிழிப்பு | உரோ. 6:3 - 11 | திருமுழுக்கு அருளடையாளம் இறை நம்பிக்கையாளரை கிறிஸ்துவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் இணைக்கின்றது என்பதை அறிந்துகொள்வர் | “திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்கு தெரியாதா?” - உரோ. 6:3 | திருமுழுக்கு அருளடையாளம் புதிய உடன்படிக்கையின் ஆரம்பம். |
| | லூக். 24:1 - 12 | பழைய ஏற்பாட்டு வாக்குறுதிகளை உயிர்த்தெழுதல் நிறைவு செய்கிறது என தெரிந்துகொள்வர். | “அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்” - லூக் 24: 6 | மீட்பின் உடன்படிக்கையை கிறிஸ்து முழுமையடையச் செய்கிறார். |
| திருமுழுக்கு அருளடையாளம் | மத். 3:11-17, யோவான் 8:12 தி.வெளி. 1:8 தி.ப. 2:38, கொலோ. 3:1-17 எபே. 4:22-24 | திருமுழுக்கானது கிறிஸ்துவின் உடன்படிக்கைக்குள் புகுவதாக விளங்கிக் கொள்வர்: நீர் மற்றும் மெழுகுத்திரியின் அடையாளம் வாக்குறுதிகளை புதுப்பித்தலுக்கு பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிவர். | “... உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெறுங்கள்” - தி.ப. 2:38<br><br>நானே உலகின் ஒளி - யோவான் 8:12 | திருமுழுக்கு அருளடையாளம் கிறிஸ்துவுக்குள் புது வாழ்வைப் பெற்றுத்தருகிறது. |
| திவ்ய நற்கருணை | 1கொரி. 10:16-21 | நற்கருணையை உடன்படிக்கையின் உணவாக அறிந்துகொள்ள கிறிஸ்துவுடனும் திருஅவையுடனும் இணைந்திருத்தல் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர். | “கடவுளை போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா!” - 1கொரி. 10:16 | உடன்படிக்கையின் வாக்குறுதிகளை நற்கருணை அருளடையாளம் கிறிஸ்தவர்களை கிறிஸ்துவுக்குள் ஒன்றிக்க செய்வதோடு உடன்படிக்கையின் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| விசுவாச பிரமாணம். நிசேயா நம்பிக்கை அறிக்கை. (சகல பகுதிகளும் இல. 8ஐ வலியுறுத்துகின்றது) | திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை.<br><br>நிசேயா அறிக்கை | நம்பிக்கை அறிக்கையின் அனைத்து பகுதிகளையும் வாசித்து விளக்குவர்<br><br>உடன்படிக்கை திருஅவையில் தூய ஆவியின் பங்கை புரிந்துகொள்வர். | "... தூய ஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று..."<br>- தி.ப. 1:8<br><br>"ஆண்டவரது ஆவி என் மேல் உள்ளது"<br>- லூக். 4:18 | தூய ஆவியின் பாதுகாப்பும் திருஅவையானது கிறிஸ்துவின் பணியை தொடந்து ஆற்றலும். |
| செபம்<br>- திருப்பாடல் | திருப்பாடல் 15, 18, 103 அதிகாரங்கள் | நம்பிக்கை, புகழ் மற்றும் உடன்படிக்கை நன்றியை வெளிப்படுத்த திருப்பாடல்களை பயன்படுத்துவர். | "ஆண்டவரே, உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்?"<br>- தி.பா. 15:1<br><br>"ஆண்டவர் இரக்கமும் அருளும் உடையவர்"<br>- தி.பா. 103:8 | ஆண்டவர் இரக்கமும் அருளும் உடையவர். இறைபுகழ்ச்சியையும், நன்றியையும் நம்பிக்கையும், திருப்பாடல்கள் வழங்குகின்றன. |



## திருவிவிலிய வினாடி வினா - அட்டவணை (தரம் 11)

# கிறிஸ்துவே உடன்படிக்கையின் நிறைவு

| தலைப்பு | பிரதான இறைவார்த்தை பகுதி | கற்றல் பெறுபேறு | மேலதிக வசனங்கள் | காரணம் |
|---|---|---|---|---|
| ஏதேன் தோட்ட உடன்படிக்கை | தொ. நூ.3:15, உரோ. 5:12-21 | மீட்பர் பற்றிய முதலாவது வாக்குறுதியையும் அது கிறிஸ்துவில் நிறைவேறியதையும் விளங்கிக் கொள்வர். | "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலை காயப்படுத்துவாய்" - **தொ.நூ. 3:15**<br><br>"திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல. நிறைவேற்றுவதற்கே வந்தேன்" - **மத். 5:17** | கடவுளின் மீட்புத் திட்டத்தை, பாவத்திலிருந்து (வீழ்ச்சியிலிருந்து) காட்டுகிறது. கிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் வெற்றிகொண்டார் |
| ஆபிரகாமுடனான உடன்படிக்கை | தொ.நூ. 12:1-3, கலா. 3:16 | உலகத்தில் அனைவருக்குமான இறைவனின் ஆசீர், கிறிஸ்துவில் முழுமை அடைந்துள்ளதை விளங்கிக் கொள்வர் | "... உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்" – **தொ.நூ. 12:3**<br><br>"வாக்குறுதிகள் ஆபிரகாமுக்கும் அவரது வழிமரபினருக்கும் தரப்பட்டன. பலரைக் குறிக்கும் முறையில் 'வழிமரபினருக்கு' என்று உள்ளது. அந்த வழிமரபினர் கிறிஸ்துவே" – **கலா. 3:16** | கடவுளின் உடன்படிக்கையின் தொடர்ச்சியையும் உலகளாவிய மீட்பையும் எடுத்துக் காட்டுகிறது. |



| | | | | |
|---|---|---|---|---|
| நோவாவுடனான உடன்படிக்கை | தொ. நூ. 9:8-17,<br>பேதுரு 3:20-21 | இறை இரக்கத்தினூடாகவும் நீரினூடாகவும் கடவுளின் மீட்புக்கான உடன்படிக்கையை விளங்கிக் கொள்வர் | "உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகின்றேன்: சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப்பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது..." - **தொ.நூ. 9:11**<br><br>"... இத்திருமுழுக்கு உடலின் அழுக்கை போக்கும் செயல் அல்ல: அது குற்றமற்ற மனச்சான்றுடன் கடவுளுக்கு தரும் வாக்குறுதியாகும்..." - **1பேதுரு 3:21** | கடவுளின் உடன்படிக்கையானது இரக்கம் மற்றும் பாதுகாப்பை திருமுழுக்கு அருளடையாளத்தின் மூலம் முன்னிலைப் படுத்துகிறது. |
| மோசேயுடனான உடன்படிக்கை | வி.ப. 19 - 24 அதி.<br><br>மத். 5 - 7 அதி. | கிறிஸ்துவுக்கான ஆயத்தம் செய்ய சட்டத்தைக் கற்றுக்கொள்வர். மலைபொழிவில் முழுமை பெறுதல் | "... எனக்கு நீங்கள் குருத்துவ அரசராகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்..." – **வி.ப. 19:6**<br><br>"திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல. நிறைவேற்றுவதற்கே வந்தேன்" - **மத். 5:17** | கடவுளின் உடன்படிக்கையின் வழிநடத்தலும் ஒழுக்க சட்டமும் கிறிஸ்துவுக்குள் நிறைவேறுவதை காட்டுகிறது. |
| தாவீதுடனான உடன்படிக்கை | 2 சாமு. 7:12 - 16,<br>மத். 1:1 | தாவீதின் வழிமரபிலிருந்து வரும் அரசராக கிறிஸ்துவை அடையாளம் காண்பர். | "... உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்" - **2சாமு. 7:16**<br><br>"தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்" - **மத். 1:1** | இயேசுவில் நிறைவேறிய இறையரசிற்கான கடவுளின் வாக்குறுதியை காட்டுகிறது. |



| | | | | |
|---|---|---|---|---|
| இயேசு தூய ஆவியை வாக்களித்தல் | யோவான் 14:16 - 17, 26 | தூய ஆவியானவர் ஒரு ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் இருப்பதற்கான வாக்குறுதியை அறிந்து கொள்வர் | “உங்களோடு என்றும் இருக்கும் படி மற்றொரு துணையாளரை உங்களுக்காகத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்” - **யோவான் 14:16**<br><br>“என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார் நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்” - **யோவான் 14:26** | நம்பிக்கையாளர், உடன்படிக்கையின் விசுவாசத்தில் தொடர்ந்து வாழ, தூய ஆவியானவர் கிறிஸ்துவின் பணியை தொடர்ந்தாற்றுகிறார் |
| வழிகாட்டுபவரும் ஆலோசகருமான தூய ஆவி | யோவான் 14:15 - 31 | திருஅவையை வழிநடத்துவதிலும் ஆறுதல் படுத்துவதிலும் தூய ஆவியின் பங்கை புரிந்துகொள்வர். | “உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்” - **யோவான் 16:13**<br><br>“அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்” - **யோவான் 14:27** | நம்பிக்கையாளரின் வாழ்க்கையில் தூய ஆவியின் பிரசன்னம் இருப்பதை காட்டுகிறது.<br><br>ஒழுக்கத்திலும் ஆன்மீகத்திலும் வாழ வழிகாட்டுகிறது. |



| | | | | |
|---|---|---|---|---|
| திருஅவையின் பணி (புனித பவுலின் கடிதங்கள்) | 1 கொரி. 12, எபே. 4, உரோ. 12 | திருஅவையின் பணியானது கிறிஸ்துவுக்கு சாட்சிபகர்ந்து, ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் என்பதை கற்றுக்கொள்வர். | "உடல் ஒன்றே உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்." - **1கொரி. 12:12**<br>"ஏனெனில், கடவுள் தாம் விடுத்த அழைப்பையும் கொடுத்த அருள்கொடைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்வதில்லை" - **உரோ. 11:29** | திருஅவையானது கிறிஸ்துவின் உடன்படிக்கைப் பணியை தொடர்ந்தாற்றுகிறது. ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அதில் பங்குண்டு. |
| "பாறை" எனப்படும் பேதுருவும் அவரது திருத்தூதுப் பணியும் | மத். 16:18 | பேதுருவின் வகிபாகம் மற்றும் தொடர்ச்சியான திருத்தூது அதிகாரத்தை புரிந்துகொள்வர். | "எனவே, நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா" – **மத். 16:18**<br>2. "என் ஆடுகளைப் பேணிவளர்" – **யோவான் 21:17** | அப்போஸ்தலிக்க அதிகாரத்தையும் உடன்படிக்கையின் தொடர்ச்சியையும் நிறைவேற்றுதல். |
| உறுதிப்பூசுதல் அருளடையாளம் | வி.ப. 30:22-33: 2 கொரி. 1:21-22, எபே. 1:13, 2 திமோ. 2:3 | உறுதிப்பூசுதல் அருளடையாளத்தின் ஊடாக, தூய ஆவியானவரால் உறுதிப்படுத்தப்பட்டு கிறிஸ்துவுக்குள் இணைதல் என்பதை புரிந்துகொள்வர். | "அவரே நம் மீட்பை உறுதிப்படுத்தும் அடையாளமாகத் தூய ஆவியை நம் உள்ளத்தில் பொழிந்து நம்மீது தம் முத்திரையைப் பதித்தார்" – **2கொரி. 1:22**<br>"கிறிஸ்துவின் போர்வீரர்கள்" – **2 திமோ. 2:3** | உறுதிப்பூசுதல் அருளடையாளம் உடன்படிக்கையில் பங்கேற்க வலிமை தந்து கிறிஸ்துவின் பணியைச் செய்ய தயார்படுத்துகின்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| நிசேயா - கொன்ஸ்தாந்திநோபிள் விசுவாச அறிக்கை | அனைத்து பகுதிகளும் - சிறப்பாக 8, 9ஐ வலியுறுத்துகின்றன. | விசுவாசப் பிரணமானத்தை விளக்கிக் கூறுவர். தூய ஆவியையும் திருஅவையையும் புரிந்துகொள்வர் | "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" - **யோவான் 16:13**<br><br>"எனவே, நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா" - **மத். 16:18** | திருஅவையின் உடன்படிக்கையில் தூய ஆவியின் பங்களிப்பையும் விசுவாச ஒன்றிப்பையும் காட்டுகிறது.<br><br>அப்போஸ்தலிக்க அதிகாரம் மற்றும் உடன்படிக்கையின் தொடர்ச்சியை நிலைநாட்டுதல் |
| செபம் | வி.ப. 15:1 - 8 தி.பா. 103அதி. எசாயா 12:1-6 | கடவுளின் உடன்படிக்கையில் நம்பிக்கையையும் நன்றியறிதலையும் மகிழ்வையும் வெளிப்படுத்துவர். | "ஆண்டவரே என் ஆற்றல் என் பாடல்."<br><br>**- வி.ப. 15:2**<br><br>"ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்"<br>**- தி.பா. 103:8**<br><br>"ஆண்டவருக்குப் புகழ்ப்பா அமைத்துப் பாடுங்கள். ஏனெனில் அவர் மாட்சியுறும் செயல்களைப் புரிந்துள்ளார்"<br>**- எசாயா 12:5** | விசுவாச ஒன்றிப்பையம் திருஅவையின் உடன்படிக்கையில் தூய ஆவியின் வகிபாகத்தையும் காட்டுகிறது. |

# தரம் 10

## கருப்பொருள் – கிறிஸ்து உடன்படிக்கையின் முழுமை

### I. திருவிவிலியம் - உயிர்ப்பு விழாவின் திருவிழிப்பு வாசகங்கள் (மீட்பின் தொடர்ச்சி)

**பிரதான பகுதி: பழைய ஏற்பாடு**

- தொடக்க நூல் 1:1 - 2:2 - படைப்பு
- தொடக்க நூல் 22:1 - 18 - ஈசாக்கை பலியிடல்
- விடுதலைப் பயணம் 14:15 - 15:1 - செங்கடலைக் கடத்தல்/ மோசேயின் பாடல்
- எசாயா 54:5 - 14 - இஸ்ரயேலின் மணவாளனாக கடவுள்.
- எசாயா 55:1 - 11 - மீட்புக்கான அழைப்பு
- பாரூக் 3:9 - 15, 32 - 4:4 - ஞானமும் வழிநடத்துதலும்
- எசேக்கியேல் 36:16 - 17, 18 - 28 - புதிய வாழ்விற்கும் புதுப்பித்தலுக்குமான வாக்குறுதி.

**கற்றல் பெறுபேறுகள்:**

- மீட்பு வரலாற்றை கிறிஸ்துவின் வருகைக்கான ஆயத்தமாக விளங்கிக் கொள்வர்.
- கடவுளின் பிரமாணிக்கத்தையும் உடன்படிக்கையின் வாக்குறுதியையும் தெரிந்துகொள்வர்.
- பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை அனைத்தும் கிறிஸ்துவிற்குள் முழுமையடைகிறது எனக்காண்பர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. “தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த பொழுது...” - **தொ.நூ. 1:1**
2. “எரிபலிக்கான ஆட்டுக்குட்டியை பொறுத்த மட்டில், கடவுளே பார்த்துக்கொள்வார்” - **தொ.நூ. 22:8**
3. “ஆண்டவரே உங்களுக்காக போரிடுவார்: நீங்கள் அமைதியாய் இருங்கள்” - **வி.ப. 14:14**
4. “நான் தூய நீரை உங்கள்மேல் தெளிப்பேன். நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள்” - **எசே. 36:25**

கடவுளின் தொடர்ச்சியான மீட்புத் திட்டமானது உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக இருப்பதில் கிறிஸ்துவில் நிறைவடைகின்றது என்பதை காட்டுகிறது.

**புதிய ஏற்பாடு**

- **உரோமர் 6:3** - 11 - திருமுழுக்கும் கிறிஸ்துவில் புதுவாழ்வும்
- **லூக்கா 24:1 – 12** - இயேசுவின் உயிர்ப்பும் இறைவாக்குகள் நிறைவேறுதலும்

**கற்றல் பெறுபேறுகள்:**

- இயேசுவின் உயிர்ப்பை பழைய ஏற்பாட்டு வாக்குறுதிகளுடன் தொடர்புபடுத்துவர்.
- திருமுழுக்கு அருளடையாளமானது மீட்பின் உடன்படிக்கையின் நுழைவாயில் என்பதை அறிந்து கொள்வர்.
- கிறிஸ்துவே மீட்பு வரலாற்றின் முழுமை/ நிறைவு என்பதை புரிந்து கொள்வர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. “திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்கு தெரியாதா?” - **உரோ. 6:3**
2. “அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்” - **லூக் 24: 6**



புதிய உடன்படிக்கையையும் பாவம் மற்றும் இறப்பின் மீதான கிறிஸ்துவின் வெற்றியையும் எடுத்துக் காட்டுதல்.

## II. அருளடையாளம் - உடன்படிக்கையின் முழுமை/ நிறைவு

**அ. திருமுழுக்கு அருளடையாளம் : திருமுழுக்கு நீர் (மத். 3:11 – 17), பாஸ்கா திரி (யோவான் 8:12, திருவெளிபாடு 1:8), திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிப்பு (திருத்தூதர் பணி 2:38, கொலோசையர் 3:1 – 17, எபேசியர் 4:22 – 24)**

**கற்றல் பெறுபேறுகள்:**

- திருமுழுக்கு என்பது கிறிஸ்துவின் உடன்படிக்கைக்குள் நுழைவது என்பதை புரிந்துகொள்வர்.
- நீர், திரி, ஆசீர் என்பதன் அடையாளங்களை இனங்காண்பர்.
- அன்றாட வாழ்வில் திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்துக்கொள்ள கற்றுக்கொள்வர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "... உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெறுங்கள்" - **தி.ப. 2:38**
2. "நீங்கள் திருமுழுக்குப் பெற்றபோது அவரோடு அடக்கம் செய்யப்பட்டீர்கள். சாவிலிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் அவரோடு நீங்களும் உயிர்பெற்று எழுந்துள்ளீர்கள் - **கொலோ. 2:12**
3. "உலகின் ஒளி நானே: என்னை பின்தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியை கொண்டிருப்பார்" - **யோவான் 8:12**



திருமுழுக்கு என்பது கடவுளின் உடன்படிக்கையின் அடையாளமாகும், இது கிறிஸ்துவில் புதிய வாழ்வை அளிக்கிறது.

**ஆ. தூய நற்கருணை (திருப்பலி) : கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பங்குபெறுதல்.**

**கற்றல் பெறுபேறுகள்:**

- மீட்பின் உடன்படிக்கை உணவாக நற்கருணையை புரிந்து கொள்ளவர்.
- கிறிஸ்துவுக்கும் திருஅவைக்கும் இடையே உள்ள ஒற்றுமையை இனங்காண்பர்.
- நற்கருணையானது கல்வாரி உடன்படிக்கையின் தொடர்ச்சி என்பதை காண்பர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "கடவுளை போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா!" - **1கொரி. 10:16**
2. "அப்பம் ஒன்றே, நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம்" - **1கொரி. 10:17**

நற்கருணையானது நம்பிக்கையாளரை கிறிஸ்துவுடன் இணைப்பதுடன் உடன்படிக்கையின் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறது. (நம்பிக்கை அறிக்கை, நிசேயா கொன்ஸ்தாந்துநோபிள் விசுவாச அறிக்கை)

## III. நம்பிக்கை அறிக்கை

- அனைத்து விசுவாச அறிக்கை பகுதிகளும், பகுதி 8ஐ வலியுறுத்துகின்றன.

**கற்றல் பெறுபேறுகள்:**

- விசுவாச அறிக்கையை முழுமையாக விளங்கிக் கூறுவர்.
- உடன்படிக்கையின் திருஅவையில் தூய ஆவியின் வகிபங்கை விளங்கிக் கொள்வர்.
- விசுவாச அறிக்கை 8 ஐ அருளடையாளங்களுடனும் திருஅவையின் தூதுப்பணியுடனும் தொடர்புபடுத்துவர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1.“ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார்” – **லூக். 4:18**
2. “... தூய ஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று...” - **தி.ப. 1:8**

கிறிஸ்துவின் உடன்படிக்கையை தொடர்வதிலும் திருஅவையின் பணியை வழிநடத்துவதிலும் பரிசுத்த ஆவியின் வகிபங்கை காட்டுகிறது.

## IV. செபம் - செபமும் புகழ்பாடலும்

☼ திருப்பாடல் : 15, 18, 103 அதிகாரங்கள்.

**கற்றல் பெறுபேறுகள்:**

☼ திருப்பாடல்களை, உடன்படிக்கையின் நம்பிக்கை, புகழ்ச்சி, நன்றியறிதலை வெளிப்படுத்தப் பயன்படுத்துவர்.
☼ கடவுளின் பிரமாணிக்கத்தையும், இரக்கத்தையும், வழிநடத்துதலையும் இனங்காண்பர்.
☼ தனிச் செபத்தை திருவிவிலிய உடன்படிக்கையின் கருப்பொருள்களுடன் தொடர்புபடுத்துவர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. “ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிட தகுதியுள்ளவர் யார்?” - **தி.பா. 15:1**
2. “... என் ஆற்றலாகிய ஆண்டவரே உம்மிடம் நான் அன்பு கூறுகின்றேன்” - **தி. பா. 18:1**
3. “ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்” - **தி.பா. 103:8**

கடவுளின் அன்பு உடன்படிக்கைக்கு பதிலளிப்பதாக திருப்பாடல்கள், நன்றியறிதல், நம்பிக்கை புகழ்ச்சியாக அமைந்துள்ளன என்பதை கற்பிக்கின்றது.

### கற்றல், கற்பித்தலுக்கான பரிந்துரைகள்:

☼ **கதை கூறுதல் :** படைப்பு தொடக்கம் உயிர்ப்பு வரையான மீட்பின் தொடர்ச்சி.
☼ **காண் சாதனங்கள் :** தண்ணீர், மெழுகுதிரி - திருமுழுக்கு, அப்ப இரச பாத்திரம் - நற்கருணை, நெருப்பு - தூய ஆவி, திருஅவையின் அடையாளங்கள், உடன்படிக்கை பேழை
☼ **ஆக்கச் செயற்பாடுகள் :** –

**வரைதல் :** மீட்பின் வரலாற்றை அல்லது உடன்படிக்கையின் அடையாளங்களை வரைதல்.
**நடித்தல் :** திருமுழுக்கு, இறுதி இராப்போசனம், பெந்தகோஸ்து நிகழ்வுகளை நடித்தல்.
**செபம்:** உடன்படிக்கையின் வாக்குறுதிகளை தனது சொந்த சிந்தனையில் எழுதுதல்.
**அபிநயப் பாடல்:** உயிர்ப்பு திருவிழிப்பு பாடல், திருப்பாடல் ஓதுதல், மரியாளின் புகழ்ச்சி பாடல்.

## V. மதிப்பீடும் மீளாய்வும்

**மொத்த புள்ளிகள் : 100**

| பிரிவு | வகை | புள்ளிகள் |
|---|---|---|
| எழுத்து சுற்று | பல்தேர்வு வினாக்கள், இடைவெளி நிரப்புதல், குறு விடைகள் | 40 |
| மனனப்பகுதி சுற்று | திருப்பாடல்கள்/ மேலதிக வசனங்கள் | 20 |
| கதை கூறல்/வரைதல் சுற்று | மீட்பு வரலாறு மற்றும் அருளடையாளங்களின் காட்சிகள் | 20 |
| கிரகித்தல் சுற்று | உடன்படிக்கை எனும் கருப்பொருளில் காரணம் சார்ந்த வாய்மொழி கேள்விகள் (என்ன, ஏன், எதற்காக, எப்படி?) | 20 |

## பரிசில் திட்டம்

- தங்கம் — 85–100
- வெள்ளி — 70–84
- வெண்கலம் — 50–69
- சான்றிதழ் — 50க்கு மேல்

## மேலதிக மேற்கோள்களை வழங்குவதன் பயன்கள்

☼ கிறிஸ்து உடன்படிக்கையின் நிறைவு எனும் கருப்பொருளை ஆழமாக அறிய மீள் வலியுறுத்தல்.

☼ மனனம் செய்து மீள ஒப்புவிக்கவும் (மனப்பாடமாக கூறுதல்) தியானிக்கவும் மனனப்பகுதிகளை வழங்குதல்.

☼ திருவிவிலிய அறிவானது அருளடையாளங்களோடும், விசுவாச அறிக்கையோடும் செபத்தோடும் தொடர்புபடுத்துகிறது.



## தரம் 11
## கருப்பொருள்:
# கிறிஸ்துவே உடன்படிக்கையின் நிறைவு

## I. இறைவார்த்தை - பழைய, புதிய ஏற்பாட்டு உடன்படிக்கையில் கிறிஸ்து

**பழைய ஏற்பாடு: உடன்படிக்கைகள்**

**1. ஏதேன் தோட்ட உடன்படிக்கை - தொடக்க நூல் 3:15 , - உரோமர் 5:12–21**

**கற்றல் பெறுபேறுகள்:**

- மீட்பர் பற்றிய முதல் வாக்குறுதியும் கிறிஸ்துவில் அது நிறைவேறியதையும் விளங்கிக்கொள்வர்.
- கிறிஸ்துவே பாவத்தையும் இறப்பையும் வெற்றிகொண்டவர் என்பதை புரிந்துகொள்வர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலை காயப்படுத்துவாய்" - **தொ.நூ. 3:15**
2. "... ஒருவர் குற்றத்தாலே, அந்த ஒருவர் வழியாக சாவு ஆட்சி செலுத்தினதென்றால்..." - **உரோ. 5:17**

கடவுளின் மீட்புத்திட்டம் மனிதனின் வீழ்ச்சியில் தொடங்குகின்றது: கிறிஸ்து பாவத்தையும் இறப்பையும் வெற்றிகொள்கின்றார்.

**2. ஆபிரகாமுடனான உடன்படிக்கை – தொ.நூ. 12:1–3, கலாத்தியர் 3:16**

**கற்றல் பெறுபேறுகள்:**

- எல்லா இனங்களுக்குமான இறைவனுடைய ஆசீர்வாதத்தின் வாக்குறுதி கிறிஸ்துவில் முழுமை அடைகிறது என்பதை புரிந்துகொள்வர்.
- ஆண்டவரின் உடன்படிக்கையில் ஆபிரகாம் ஒரு முன்மாதிரி என்பதை விளங்கிக்கொள்வர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "... உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்" - **தொ.நூ. 12:3**
2. "வாக்குறுதிகள் ஆபிரகாமுக்கும் அவரது வழிமரபினருக்கும் தரப்பட்டன. பலரைக் குறிக்கும் முறையில் 'வழிமரபினருக்கு' என்று உள்ளது. அந்த வழிமரபினர் கிறிஸ்துவே" - **கலா. 3:16**

தொடரும் கடவுளுடைய வாக்குறுதியையும் உலக மீட்பையும் எடுத்துக் காட்டுகிறது.

**3. நோவாவுடனான உடன்படிக்கை – தொ.நூ. 9:8 – 17, 1பேதுரு 3:20 – 21**

**கற்றல் பெறுபேறுகள்:**

- கடவுளின் இரக்கத்தையும் உடன்படிக்கையின் பாதுகாப்பையும் காண்பர்.
- நோவாவுடனான உடன்படிக்கையை கத்தோலிக்கத் திருமுழுக்கோடு தொடர்புபடுத்துவர்.



**மேலதிக மேற்கோள்கள்:**

1. "உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகின்றேன்: சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப்பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது..." - **தொ.நூ. 9:11**
2. "... இத்திருமுழுக்கு உடலின் அழுக்கை போக்கும் செயல் அல்ல: அது குற்றமற்ற மனச்சான்றுடன் கடவுளுக்கு தரும் வாக்குறுதியாகும்..." - **1பேதுரு 3:21**

திருமுழுக்கின் முன்னடையாளமானது கடவுளின் இரக்கத்தின் உடன்படிக்கையாகும்.

**4. மோசேயுடனான உடன்படிக்கை – வி.ப. 19–24, மத். 5–7**

**கற்றல் பெறுபேறுகள்:**

☼ கிறிஸ்துவின் வருகைக்கான ஆயத்தமாக கடவுளின் சட்டத்தைக் கற்றுக்கொள்வர்.

☼ மலைப்பொழிவில் கிறிஸ்துவின் சட்டம் நிறைவேறியதைக் புரிந்துகொள்வர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "... எனக்கு நீங்கள் குருத்துவ அரசராகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்..." - **வி.ப. 19:6**

2. "திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல. நிறைவேற்றுவதற்கே வந்தேன்" - **மத். 5:17**

இறைவனின் உடன்படிக்கை வழிநடத்துதல் மற்றும் ஒழுக்க சட்டம் என்பன கிறிஸ்துவில் முழுமை அடைகிறது.

**5. தாவீதுடனான உடன்படிக்கை - 2சாமு. 7:12–16, மத். 1:1**



தாவீது அரசன்

**கற்றல் பெறுபேறுகள்:**

☼ கிறிஸ்துவை தாவீன் வழித்தோன்றலின் நித்திய அரசராக இனம் காணுதல்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "... உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்" - **2சாமு. 7:16**
2. "தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்" - **மத். 1:1**

இறைவனின் அரச உரிமைக்கான வாக்குறுதி இயேசுவில் நிறைவடைகின்றது.

**புதிய ஏற்பாடு : கிறிஸ்துவும் தூய ஆவியும்**

☼ இயேசு தூய ஆவியானவரை வாக்களித்தல் - **யோவான் 14:16–17, 26**

**கற்றல் பெறுபேறுகள்:**

☼ தூய ஆவியானவர் ஒரு ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறார் எனும் வாக்குறுதியை அறிவர்

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "உங்களோடு என்றும் இருக்கும் படி மற்றொரு துணையாளரை உங்களுக்கத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்" - **யோவான் 14:16**

2. "என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்" - **யோவான் 14:26**



தூய ஆவி கிறிஸ்துவின் பணியை தொடந்தாற்றுவதோடு திருஅவையையும் தொடர்ச்சியாக வழிநடத்துகிறார்.

**தூயஆவியானவர், வழிநடத்துபவரும் உண்மையை வெளிப்படுத்துபவருமாவார் - யோவான் 14:15 – 31**

**கற்றல் பெறுபேறுகள்:**

☼ திருஅவையை வழிநடத்தி ஆறுதல் படுத்துவதில் தூய அவியின் வகிபாகத்தை விளங்கிக்கொள்வர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" - **யோவான் 16:13**

2. “அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்” - **யோவான் 14:27**

விசுவாசிகளின் வாழ்வில் தூய ஆவியின் உயிருள்ள பிரசன்னம் இருப்பதை காட்டுகிறது.

**திருஅவையின் பணி – பவுலின் கடிதங்கள்(Pauline Epistles) - 1கொரி. 12, எபே. 4, உரோ. 12**

**கற்றல் பெறுபேறுகள்:**

☼ கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழவும் திருஅவையின் பணியை ஒற்றுமையுடன் கட்டியெழுப்பவும் கற்றுக்கொள்வர்.

### மேலதிக மேற்கோள்கள்:

1. “உடல் ஒன்றே உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்.” - **1கொரி. 12:12**
2. “ஏனெனில், கடவுள் தாம் விடுத்த அழைப்பையும் கொடுத்த அருள்கொடைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்வதில்லை” - **உரோ. 11:29**

திருஅவை கிறிஸ்துவின் உடன்படிக்கை பணியை தொடர்ந்தாற்றுகின்றது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் அதில் பங்கு உண்டு.

**"பாறை" எனும் பேதுரு மற்றும் திருத்தூது பணி - மத். 16:18**

**கற்றல் பெறுபேறுகள்:**

☼ பேதுருவின் வகிபங்கையும் திருத்தூது அதிகாரத்தையும் புரிந்துகொள்ளல்.

### மேலதிக மேற்கோள்கள்:

1. “எனவே, நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின் மேல் என் திரு அவையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா” - **மத். 16:18**



2. “என் ஆடுகளைப் பேணிவளர்” - **யோவான் 21:17**

திருத்தூது அதிகாரத்தையும் உடன்படிக்கையின் தொடர்ச்சியையும் முன்னிலைப்படுத்தல்.

## II. அருளடையாளம் - உறுதிப்பூசுதல்

**பிரதான பகுதி: கிறிஸ்மா தைலத்தினால் அபிசேகம் செய்தல் (விடுதலை பயணம் 30:22 – 33) “அவரே நம் மீட்பை உறுதிப்படுத்தும் அடையாளமாகத் தூய ஆவியை நம் உள்ளத்தில் பொழிந்து நம்மீது தம் முத்திரையைப் பதித்தார்” (2கொரிந்தியர் 1:22, எபேசியர் 1:13), “கிறிஸ்துவின் போர்வீரர்கள்” (2திமொத்தி. 2:3)**

**கற்றல் பெறுபேறுகள்:**

☼ உறுதிப்பூசுதல் அருளடையாளமானது, தூய ஆவிக்குள் உறுதிப்படுத்தப்படவும் கிறிஸ்துவுக்குள் அர்ப்பணமாகவுமே என்பதை விளங்கிக்கொள்வர்.

☼ இவ்வருளடையாளமானது பணிபுரிதலுக்கும் சாட்சியத்துக்குமான உடன்படிக்கையின் முத்திரை என்பதை அறிவர்.

### மேலதிக மேற்கோள்கள்:

1. “தூய ஆவியை நம் உள்ளத்தில் பொழிந்து நம்மீது தம் முத்திரையைப் பதித்தார்” - **2 கொரிந்தியர் 1:22**
2. “கிறிஸ்தவின் படைவீரர்” - **2 திமொத்தேயு 2:3**

உறுதிப்பூசுதல் அருளடையாளமானது, உடன்படிக்கையில் பங்குகொள்வதை உறுதிப்படுத்துவதோடு கிறிஸ்துவின் பணிக்கு நம்மை பலப்படுத்துகின்றது.

## III. நம்பிக்கை அறிக்கை - நிசேயா (கொன்ஸ்டன்டைன்) விசுவாச அறிக்கை

**வலியுறுத்தல்: அனைத்துப் பகுதிகளும், 8 மற்றும் 9 பகுதிகள் விசேட கவனம் செலுத்தப்படும்**

**கற்றல் பெறுபேறுகள்:**

- விசுவாச அறிக்கையை விளக்கத்துடன் கூறுவர்.
- தூய ஆவியின் வகிபங்கையும் திருஅவையையும் விளங்கிக்கொள்வர்.
- நம்பிக்கை அறிக்கையை அருளடையாளம் மற்றும் திருஅவையின் பணியுடன் புரிதலுடன் தொடர்புபடுத்துவர்.



**மேலதிக மேற்கோள்கள்:**

1. "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார் தாம் கேட்பதையே பேசுவார் வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார்" **– யோவான் 16:13**
2. "எனவே, நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா" **– மத். 16:18**

திரு அவையின் உடன்படிக்கையில் விசுவாசத்தின் ஒற்றுமையையும் தூய ஆவியாரின் வகிபங்கையும் காட்டுகிறது.

## IV. செபம் - திருப்பாடல்களும் புகழ்பாடல்களும்

- **விடுதலை பயணம் 15, திருப்பாடல் 103, எசாயா 12**

**கற்றல் பெறுபேறுகள்:**

- இறைவனின் உடன்படிக்கையில் நம்பிக்கையையும் நன்றியையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துவர்.
- கடவுளின் உண்மைத்தன்மையையும் இரக்கத்தையும் பாதுகாப்பையும் அறிந்துக்கொள்வர்.

**மேலதிக மேற்கோள்கள்:**

1. "ஆண்டவரே என் ஆற்றல் என் பாடல்." **- வி.ப. 15:2**
2. "ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்" **- தி.பா. 103:8**
3. "ஆண்டவருக்குப் புகழ்ப்பா அமைத்துப் பாடுங்கள். ஏனெனில் அவர் மாட்சியுறும் செயல்களைப் புரிந்துள்ளார்" **- எசாயா 12:5**

புகழ்ச்சி, நன்றி மற்றும் கடவுளின் உடன்படிக்கையின் பிரமாணிக்கத்தை அறிந்துகொள்ள கற்றுத்தருகிறது.

## கற்றல், கற்பித்தலுக்கான பரிந்துரைகள்

- **கதை கூறுதல் :** பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகள், கிறிஸ்துவே முழுநிறைவு, தூய ஆவி, மற்றும் திருஅவை பணி
- **காண் சாதனங்கள்:** ஏதேன் தோட்டம்/ ஆபிரகாம், அருளடையாளத்துக்காக தண்ணீர் மற்றும் எண்ணை, தூய ஆவியாருக்கு நெருப்பு, பேதுரு/திருத்தூது அதிகாரத்திற்கு திறவுகோல்
- **ஆக்கச் செயற்பாடுகள் :-**
  - **வரைதல் :** உடன்படிக்கைகள், உறுதிப்பூசுதலுக்கான அடையாளங்கள்
  - **நடித்தல் :** பெந்தகோஸ்து நிகழ்வு, உறுதிப்பூசுதல், திருத்தூதுப்பணி
  - **எழுதுதல் :** உடன்படிக்கையில் பங்குபற்றுதலைப் பிரதிபலிக்கும் விதமாக செபம்.
- **அபிநய பாடல் :** திருப்பாடல்கள், புகழ்பாக்கள், உயிர்ப்பு விழா பாடல்கள், மரியாளின் புகழ்பாடல்

## V. மதிப்பீடும் மீளாய்வும்

**மொத்த புள்ளிகள்: 100**

| பிரிவு | வகை | புள்ளிகள் |
|---|---|---|
| எழுத்து சுற்று | பல்தேர்வு வினாக்கள், இடைவெளி நிரப்புதல், குறு விடைகள் | 40 |
| மனனப்பகுதி சுற்று | திருப்பாடல்கள்/மேலதிக மேற்கோள்கள் | 20 |
| கதை கூறல்/வரைதல் சுற்று | உடன்படிக்கை கதை அல்லது அருளடையாள நிகழ்வுகள் | 20 |
| கிரகித்தல் சுற்று | உடன்படிக்கை எனும் கருப்பொருளில் காரணம் சார்ந்த வாய்மொழி வினாக்கள் (என்ன, ஏன், எப்படி, எதற்காக?) | 20 |

### பரிசில் திட்டம்

- **தங்கம்** — 85–100
- **வெள்ளி** — 70–84
- **வெண்கலம்** — 50–69
- **சான்றிதழ்** — 50க்கு மேல்

### மேலதிக மேற்கோள்களை வழங்குவதன் பயன்கள்

- **உடன்படிக்கையின் நிறைவு கிறிஸ்து என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்தல்.**
- **மனனம் செய்து ஒப்புவிக்கவும், தியானிக்கவும் மனப்பாடப் பகுதிகளை வழங்குதல்.**
- **திருவிவிலிய கருப்பொருளுடன், அருளடையாளங்கள், விசுவாசப் பிரமாணம், செபங்கள் என்பவற்றை தொடர்புபடுத்துதல்.**

